இந்தியக்
கம்யூனிஸ்டு கட்சியின்
திட்டம்

[அகில இந்திய கட்சி மாநாட்டில்
நிறைவேற்றப்பட்டது]

இந்தியக்
கம்யூனிஸ்டு கட்சியின்
திட்டம்

INFORMATION BUREAU
No.................
JANASAKTHI

[1951, அக்டோபரில் கூடிய அகில இந்திய கட்சி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு கமிட்டி
சென்னை

மார்ச் 52]

[விலை 3 அணா.

முன்னுரை

1951 ஏப்ரலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் போலிட் பீரோ கட்சிக்காக ஒரு நகல் திட்டத்தை வெளியிட்டது.

கட்சியின் பல்வேறு யூனிட்டுகளின் மகாநாடுகளில் இந்த நகலானது விவாதிக்கப்பட்டு சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

1951 அக்டோபரில் கூடிய அகில இந்திய கட்சி மகாநாட்டு நகலையும் அதற்கு வந்துள்ள திருத்தங்களையும் விவாதித்து, அவற்றில் (திருத்தங்களில்) சிலவற்றை ஏற்றுக் கொண்டு இறுதியாக திட்டத்தை நிறைவேற்றியது.

அகில இந்திய கட்சி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட கட்சியின் திட்டமாக அது இப்போது பிரசுரிக்கப்படுகிறது,

அக்டோபர், 1951. **போலிட் பீரோ.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம்

—●—

இந்திய நாட்டின் ஆட்சியாளர்களான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் டில்லியில், ஆகஸ்ட் 1947-ம் ஆண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் தலைமையினுடைய சர்க்காரை ஸ்தாபித்தார்கள். வெறுக்கத்தக்க பிரிட்டிஷ் வைஸ்ராயும், கவர்னர்களும் இந்நாட்டிலிருந்து வெளியேறினர். அதுசமயம், அன்னிய ஏகாதிபத்திய ஆட்சி முற்றுப்பெற்று விட்டது என்றும்; இந்தியா விடுதலையையும் சுதந்திரத்தையும் பெற்றுவிட்டது என்றும்; இனி நமது நிலவளம், உழைப்புச்சக்தி, நமது தொழிற்சாலைகள், வொர்க்ஷாப்புகள், அபரிமிதமாகவுள்ள நமது இயற்கைச் செல்வம், மனித சக்தி ஆகிய வசதிகளையும் செல்வாதாரங்களையும் கொண்டு, கோடிக்கணக்கான நமது நாட்டு மக்களுக்கு ஒரு இன்ப வாழ்வை, சர்க்காரும் மக்களும் சேர்ந்து சமைத்திட முடியும் என்றும் மக்கள் நம்பும்படி செய்யப்பட்டனர். இனி நாம், நமது வறுமைப் பிணியைப் படிப்படியாக ஒழித்துக்கட்டும் பணியிலே, சகலருக்கும் உணவும், வீடும், உடையும்; வாழ்க்கைக்குத் தேவையான குறைந்தபட்ச கண்ணிய அந்தஸ்தும் உத்திரவாதம் செய்யும் பணியிலே, ஈடுபடலாம் என்றும் நம்பும்படி செய்யப்பட்டோம்.

2 நான்கு வருட நேரு சர்க்கார் ஆட்சி, பொதுமக்களின் நம்பிக்கைகளை, ஒவ்வொரு துறையிலும் பொய்ப்பித்துவிட்டது. பொதுமக்களின் வீரஞ்செறிந்த போராட்டங்களின் அடிப்படையிலே ஆட்சிப்பீடம் ஏறிய தேசிய காங்கிரஸ் சர்க்கார் நிலப்பிரபுத்துவ அட்டைகளையும், பல நூற்றாண்டுகளாக அன்னியப்படையெடுப்பாளர்களுக்கு ஆதரவு தந்தும், அவர்களுடன் சேர்ந்துகொண்டு நமது மக்களையும் நாட்டையும் கூட்டாகக் கொள்ளையடித்தும் வந்துள்ள இந்திய மன்னர்களின் குபேர சம்பத்தையும் பேணிப் பாதுகாப்பதற்கு ஏற்கனவே சங்கற்பம் செய்துகொண்டுள்ள ஒரு சர்க்காராகும். பொது மக்களின் சொந்த அனுபவம், அவர்களை இம்முடிவுக்கு அழைத்துச் சென்றுள்ளது.

மேலும் தேசிய காங்கிரஸின் சர்க்கார் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் அங்கீகாரத்தின் பேரில், நிறுவப்பெற்றுள்ளதோர் சர்க்காராகும். இதற்குக் காரணம் இந்த தேசிய காங்கிரஸ் சர்க்கார், இந்தியாவிலுள்ள அன்னிய பிரிட்டிஷ் மூலதனத்தை பேணிப் பாதுகாக்க சங்கற்பம் செய்துகொண்டதேயாகும். தேசிய காங்கிரஸ் சர்க்காரைப் பற்றிய இம்முடிவை நோக்கியும் பொது மக்களின் சொந்த அனுபவம் அவர்களை அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது.

பொதுமக்களின் வாழ்க்கைத் துறைகள் ஒவ்வொன்றிலும், மக்களுக்குத் தான் கொடுத்திருந்த வாக்குறுதிகளை இந்த சர்க்கார் நிறைவேற்றத் தவறியுள்ளது. பொதுமக்களின் அன்றாட வாழ்வு க்ஷீணித்துள்ளது. அவர்கள்மீது பளுவைச் சுமத்துவதன்மூலம் நிலப்பிரபுக்களுக்கும், கொள்ளைலாபத் திமிங்கிலங்களுக்கும் வாழ்வு மேலும் வளம்பெற்றுள்ளது.

3. நமது தொழிற்சாலைகள், ரயில்வேக்கள், சுரங்கங்கள், கப்பல் துறைகள், காப்பித் தேயிலைத் தோட்டங்கள் ஆகியவற்றிலே உழைத்துவரும் 50 லட்சம் தொழிலாளர்களும், தமது உண்மையான கூலி அளவில் வெட்டு, விஷம்போல ஏறும் விலைவாசிகள், முதலாளித்துவ "ராஷனலைசேஷன்" (ஆள் சிக்கனம் மொ-ர்.) வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டு துயருற்று வருகின்றனர். கூலி உயர்வுக்காகவும், வாழ்க்கை நிலை உயர்வுக்காகவும் அவர்கள் நடத்தும் போராட்டங்கள், துப்பாக்கிப் பிரயோகங்களின் மூலமும், போலீஸ் பயங்கரத்தின் மூலமும் இரத்த வெள்ளத்திலே ஆழ்த்தப்படுகின்றன. அவர்களது போராட்டத் தொழிற்சங்க ஸ்தாபனங்கள், சர்க்காராலும் அதன் கைக்கூலிகளாலும் சீர்குலைக்கப்படுகின்றன, பிளவுபடுத்தப்படுகின்றன, நசுக்கப்படுகின்றன. மக்களின் பெயரால், அதிக உற்பத்தியைக் கோருவதன்மூலம், தொழிலாளி வர்க்கத்தின்மீது மேலும் படுமோசமான வேலை நிலைமைகளையே சர்க்கார் திணித்து வருகிறது. இவ்வாறு, லாபவேட்டைக்காரர்கள் தமது லாபத்தை அதிகரித்துக்கொள்ளவே அது உதவி செய்கிறது.

4. நம்நாட்டு மக்களிலே 100-க்கு 80 பேராகவுள்ள கோடிக்கணக்கான விவசாயிகள், முன்பிருந்ததைப்போலவே, தரையோடு தரையாகத் தாழ்ந்து கிடக்கின்றனர். நிலம்படைத்தவர்கள், அதில் பயிரிட முடிந்தவர்கள் நிலப்பிரபுக்களாலும் லேவாதேவிக்

காரர்களாலும் மிதமிஞ்சிய குத்தகை, வட்டி ஆகிய வழிகளிலே கொள்ளையடிக்கப் படுகின்றனர். அதேபோல் முதலாளித்துவ மார்க்கட்டின் தில்லுமுல்லுகளும், அரசாங்கத்தின் வரிச்சுமையும் அவர்களது உழைப்பின் ஊதியத்தைச் சூறையாடுகின்றன. ஆனால் விவசாயிகளின் முக்கால்வாசிப்பேர், அனேகமாகத் தமக்கென்று சொந்தமான நிலமில்லாதவர்களேயாவர். நிலமில்லாமலும் கூலிக்கு வேலையும் கிடைக்காமலும் இருப்பவர்கள், நிரந்தரமான "பாப்பர்"களாக (ஓட்டாண்டிகளாக) உழல்கின்றனர். நிலப்பிரபுக்களுடையவும், "சௌக்கார்"களுடையவும் (லேவாதேவிக்காரர்களுடையவும்) பண்ணைகளிலே வேலை கிடைக்கப் பெற்றவர்கள், அடிமைகள் போன்று, ஆடுமாடுகள் போன்று வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களது குடும்பங்கள் உயிர் வாழ்வதற்குக்கூட போதாத அற்பக்கூலியே, அவர்களுக்குக் கிடைக்கிறது. இதன் காரணமாக, உணவுப் பொருள்களுடையவும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களுடையவும், உற்பத்தி வீழ்ந்து வருகிறது. இது நாட்டில் படுமோசமான உணவு நெருக்கடிக்கும், பட்டினிக்கும், கோடிக்கணக்கானவர்களின் மரணத்திற்குக் கொண்டுபோய் விடுகிறது. நிலப்பிரபுக்களாலும், லாபவேட்டைக்காரர்களாலும், நடத்தப்படும் சர்க்கார், நிலப்பிரபுத்துவ முறையை ஒழிக்கப் போவதாக தொண்டைகிழிய சத்தமிடுகிறது. ஆனால் உண்மையில் அது, மக்களை ஒடுக்கிவரும் அந்தக் கூட்டத்தினருக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை நஷ்ட ஈடாகக் கொட்டிக் கொடுக்கும் சதித் திட்டங்களையே வகுத்துவருகிறது. இவ்வாறு, மறைமுகமாக விவசாயியின் உழைப்பினின்று தமது குத்தகைத் தொகையை அரசாங்கத்தின் மூலம் பெறுவதற்கு அவர்களுக்கு வழிவகை செய்யப்படுகிறது. தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களையும், ஸ்தாபனங்களையும் ஒடுக்குவது போன்றே, நிலத்திற்கும், வாடகை, வட்டி, வரி ஆகியவற்றின் குறைப்பிற்கும் விவசாயிகள் நடத்தும் போராட்டங்களும் இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தப் படுகின்றன; அவர்களது ஸ்தாபனங்களும் ஒடுக்கப்படுகின்றன

விவசாயிகளும், நிலமில்லா விவசாயக் கூலிகளும் எங்களுக்கு நிலம் வேண்டும், குத்தகையையும் வட்டியையும் குறைக்கவேண்டும், உயர்வான கூலி வேண்டும், சீரான வாழ்க்கை, தொழில் நிலைமைகள் வேண்டும் என்று கேட்கத் துணிந்து விட்டார்கள் என்ற காரணத்தினாலே, ஒட்டுமொத்தமாக எண்ணற்ற கிராமங்க

ளும், தாலுக்காக்களும், ஜில்லாக்களும், இராணுவத்திடமும், போலீஸிடமும் ஒப்படைக்கப் பெற்றுள்ளன. இங்கெல்லாம் இராணுவமும் போலீஸும் முகாமிட்டுத் தங்கி வருகின்றன.

5. நகரங்களிலுள்ள மத்தியதர-வர்க்கங்களின் நிலையும் படுமோசமே. உயர்ந்துகொண்டே போகும் [illegible] வேலையில்லாத் திண்டாட்டம், ஆகிய இவையே அவர்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ள "வரப்பிரசாதங்கள்". தொழிலாளி வர்க்கத்தையும், உழைத்திடும் விவசாயிகளையும் எதிர் நோக்கியுள்ள அதே வாழ்க்கைப் பிரச்னைகளே, சர்க்கார் சர்வீஸிலும், தனிப்பட்ட ஆபீஸ்களிலும், பாங்கிகளிலும், இன்ஷூரன்ஸ் கம்பெனிகளிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உழைத்து ஊதியம் பெறும் நடுத்தர வர்க்கத்தினரையும் எதிர்நோக்குகின்றன.

6. தொழில் உடமையாளர்கள், வியாபாரப் பண்ட உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் ஆகிய இவர்களும்கூட இந்த சர்க்காரின் கொள்கைகளால்—ஏகபோக பாங்கர்கள், நிலப் பிரபுக்கள், மன்னர்கள், திரைமறைவில் வேலை செய்யும் அன்னிய பிரிட்டிஷ் ஆலோசகர்கள் ஆகியவர்களுடைய பூரணப் பிடிப்பின்கீழ் உள்ள இந்த சர்க்காரின் கொள்கைகளால் — பாதிக்கப்படுகின்றனர். மூலதன வினியோகம், மூலப் பொருள்களின் வினியோகம், போக்குவரத்து சாதனம், ஏற்றுமதி இறக்குமதி லைசென்சுகள் முதலிய விவகாரங்களை நிர்வகித்து வரும் சர்க்கார் இயந்திரத்திலுள்ள அதிகாரிகள் சிறு தொழில் உடமையாளர்களையும், வியாபாரிகளையும் பாதிக்கும் முறையிலேயே இக்காரியங்களை நிர்வகித்து வருகின்றனர்; அன்னிய நாட்டுக் கம்பெனிகளுடன் பங்காளி உறவு கொண்டுள்ள பெரும் ஏகபோக ஆதிக்கவாதிகளுக்கு நன்மை பயக்கும் முறையிலேயே இக்காரியங்களை நிர்வகித்து வருகின்றனர்.

7. யுத்தத் தேவைகளுக்கு உதவும் திட்டங்களைத் தவிர, மற்றெல்லா "புனர்நிர்மாண"த் திட்டங்களும், நீர்ப்பாசனத் திட்டம், ஜலாதார—மின்சார நிலையங்கள், பாக்டரிகள் கட்டுவது முதலிய திட்டங்கள் அனைத்தும்—வியர்த்தமாகி வருகின்றன. இது, நேரடியான சர்க்கார் மூலதனத்தினால் நடத்தப்படும் திட்டங்களுக்கும் சரி, பொருந்தும். இத்திட்டங்கள் அனைத்தும், அன்னிய நாட்டு சப்ளை கம்பெனிகளும் அக்கம்பெனிகளின் தொழில் நுணுக்க வல்லுனர்களும், பொறுப்பு வகித்துவரும் உயர்

தர சர்க்கார் அதிகாரிகளும், மூலதனப் பங்கு மார்க்கெட்டிலுள்ள பெரும் கொள்ளை லாப சூதாட்டக்காரர்களும் (நமது—மொ-ர்.) அரசாங்க பட்ஜெட்டை சூறையாடுவதற்கான சாதனங்களாகவே மாறிக் கொண்டிருக்கின்றன. மக்களைக் கொள்ளையடித்து கள்ள மார்க்கெட்காரர்கள் துவக்கியுள்ள தொழில்களை தேசியமயமாக்குதென்ற கோரிக்கையானது, சர்க்கார் பட்ஜெட்டில் கையாடல் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. உளுத்துப்போன உதவாக்கரைத் தொழில்களை அரசாங்க பட்ஜெட்டிலிருந்து பணம் கொடுத்து வாங்குவதின் மூலமும், மோசடித்தனமான திட்டங்களை சுமக்கும் பொறுப்பை அரசாங்க பட்ஜெட்டின் தலையில் கட்டுவதன் மூலமும், இந்தக் கையாடல் செய்யப்படுகிறது. இவ்வாறு அரசாங்கம் பங்கேற்று நடத்த முற்படும் மோசடித்தனமான திட்டங்கள் ஒவ்வொன்றும் விதிவிலக்கின்றி மண்ணைக் கவ்வுகின்றன. அதன் பிறகு இவை, சர்க்காரின் அடிவருடிகளுக்கும், தனிப்பட்ட முதலாளிமார்களுக்கும் விற்கப்படுகின்றன. இதனால் ஏற்படும் பலன் என்ன? நாடு தொழில் மயமாவது பிரிட்டிஷ்காரர்களுடையவும் அமெரிக்கர்களுடையும் தயவுக்கு உட்பட்டுக் கிடக்கிறது. நம் நாட்டை ஒரு தொழிலியல் நாடாகச் செய்வதற்கு பிரிட்டிஷ்காரர்களும், அமெரிக்கர்களும் நிச்சயம் விரும்பவில்லை. இவ்வாறு நம் நாடு தொழில் மயமாவதானது, பிரிட்டிஷ் மூலதனம் வெற்றிரதத்தின் சக்கரத்துடன் பிணைக்கப்பட்டுள்ள இந்த சர்க்காரின் ஆட்சியிலே, ஸ்தம்பித்து முன்னேறாது நிற்கிறது.

8. அதே சமயத்தில் ஏற்கெனவே இருந்துவரும் தொழில்களின் நிலை என்ன என்று கேட்டால், அவை நெருக்கடிச் சுழலில் தொடர்ந்து பிடிபட்டுக் கிடக்கின்றன என்பதே. ஏனெனில், பொதுமக்களின், குறிப்பாக விவசாயிகளின் அதிகரித்துவரும் வறுமையின் காரணமாய், இத் தொழில்களுக்குப் போதிய மார்க்கெட்டு உள்நாட்டில் கிடைப்பதில்லை. நாட்டிற்குள்ளேயும் சரி, நாட்டிற்கு வெளியேயும் சரி, இத் தொழில்களுக்கு எதிராக அன்னியக் கம்பெனிகளுடையவும், இதர கலோனியல் உலகின் ஏகாதிபத்திய எஜமானர்களுடையவும் போட்டி எதிர்ப்படுகின்றன. இவ்வாறு முன்னேற வழி காணாத முட்டுக்கட்டை நிலைக்கு இவைகள் உள்ளாக்கப்படுகின்றன.

9. இவை அனைத்திற்கும் மேலாக, வளர்ந்துவரும் பொது ஜன அதிருப்தி தன்னை எதிர்நோக்கும்போது, ஆட்டம் கொண்டுள்ள இந்த சர்க்கார், தன்னை ஆட்சிப் பீடத்திலே நிலைநிறுத்

திக்கொள்ளும் பொருட்டு, மக்களுடைய சகல பிரஜா உரிமைகளையும் ஒடுக்குகிறது; அரசியல் கட்சிகளையும் குருப்புகளையும் சட்ட விரோதமாக்குகிறது; தொழிற் சங்கங்களுக்கும் இதர மக்கள் ஸ்தாபனங்களுக்கும் தடை விதிக்கிறது; ஆயிரக்கணக்கான தொழிலாளிகளையும விவசாயிகளையும், மாணவர்களையும், ஆடவரையும், பெண்டிரையும் சிறைச்சாலைகளிலும், பலாத்காரக் காவல் முகாம்களிலும் அடைக்கிற்து. கிராமப்புறம் பூராவிலுமே, போலீஸ் ஆபீஸரும், அதிகார வர்க்க தேவதையுமே சர்வ வல்லமை படைத்த ஆட்சியாளனாகியுள்ளான். ஸ்தல காங்கிரஸ் தலைவனும், உள்ளூர் நிலப் பிரபுவும் இவ்வாட்சியாளனுக்கு உதவியாக நிற்கின்றனர். ஆகவே இத்தகைய போலீஸ் அரசாங்கத்தை நிலை நிறுத்துவதற்காகவேண்டி, வரிகள் அதிகரிக்கின்றன என்பதும், அரசாங்க பட்ஜெட்டில் 50 சதத்திற்குமேல், மக்களின் உணவுக்காகவும் உடைக்காகவும் அல்ல, வீடு கட்டவும் கல்வி விடுதிகள் கட்டவுமல்ல, சுகாதாரத்துக்காகவும் வைத்திய வசதிகளுக்காகவும் அல்ல— ஆனால், இராணுவத்திற்காகவும் போலீஸிற்காகவும், சிறைச் சாலைகளுக்காகவும், அதிகார வர்க்கத்திற்குமாகவுமே செலவிடப்படுகின்றன என்பதும் ஆச்சரியத்திற்குரியதல்ல.

10. இத்தகைய நிலைமையின் அர்த்தம் என்ன என்பதை இந்திய மக்கள் படிப்படியாக உணர்ந்து வருகின்றனர். அவர்கள் இந்த சர்க்காரை—நிலப்பிரபுக்களுடையவம் மன்னர்களுடையவும் இந்த சர்க்காரை, பண மேட்டில் அமர்ந்திருக்கும் திமிங்கிலங்களுடையவும், லாப வேட்டை சூதாடிகளுடையவும் இந்த சர்க்காரை, பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் கரத்தை, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் கரத்தைப் பற்றிக்கொண்டு தொங்கும் இந்த சர்க்காரை—மாற்ற வேண்டியதின் அவசியத்தை உணரத் தலைப்பட்டு வருகின்றனர். பிரமை தெளிந்த பொது மக்கள் (ஆசாபங்கமடைந்த மக்கள்—மொ—ர்), மெள்ள மெள்ள வந்து நெருக்கிக் கொல்லும் இந்தப் பட்டினி நிலையை, இந்த மரண நிலையை இனியும் தம்மால் தாளமுடியாததினால், மெள்ள மெள்ளப் போராட எழுந்து வருகின்றனர். இதை நகரப்புறங்களிலே தொழிலாளி வர்க்கப் போராட்டங்களிலும், கிராமப்புறங்களிலே விவசாயிகளின் எதிர்த்தாக்குதலிலும் காணலாம்.

11. பொதுமக்களின் வளர்ந்துவரும் இந்த ஒற்றுமையை, (பிரதானமாக தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையையும், விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டுறவையும்) பிரிட்

டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுடன் ஒத்துழைத்துவரும் நிலப்பிரபுக்கள், பிற்போக்கான பெரும் பூர்ஷுவாக்கள் ஆகியவர்களின் இந்த சர்க்காரை ஒழித்துக்கட்ட சித்தமாயுள்ள சகல வர்க்கங்களின் ஒற்றுமையைத் தடுத்து நிறுத்தும்பொருட்டு, இன்றுள்ள சர்க்கார், போலீஸ் அடக்குமுறை மட்டுமின்றி இதர வழி முறைகளையும் பயன்படுத்தி வருகிறது.

12. நமது நாட்டை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினின்று விடுபட்ட பரிபூரணமான சுதந்திர நாடாக ஆக்கவேண்டும் என்பது பொதுமக்களின் அபிலாஷை என்பதை சர்க்கார் உணர்ந்து, இந்தியாவை ஒரு குடியரசாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. ஆனால், ஏகாதிபத்தியத்துடன் தான்கொண்டுள்ள தொடர்புகளை முறித்துக்கொள்வதற்கு அது விரும்பாததினால், (இந்தியக்) குடியரசானது (பிரிட்டிஷ்) சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதி என்று மானவெட்கமின்றி பிரகடனப் படுத்தியுள்ளது!

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அங்கம் வகிப்பது, அவர்கள் பிரகடனப் படுத்துவதுபோல் ஒரு வெறும் சம்பிரதாய பூர்வமான விஷயமல்ல. சில குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில், இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கு முள்ள போட்டா போட்டிகளை, தனது சொந்த நன்மைக்காக இந்திய சர்க்கார் பயன்படுத்திக் கொள்கிறது. ஆனால் அதே சமயத்தில், சாராம்சத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வெளிநாட்டு கொள்கையையே அது நிறைவேற்றி வருகிறது. சமாதானத்தை விரும்பும், யுத்தத்தை விரும்பாத மக்களின் நிர்ப்பந்தத்தின் கீழ் இந்திய சர்க்கார் சமாதானத்திற்கு ஆதரவும், அணுகுண்டுக்கு எதிராகவும் பேசுகிறது. ஆயினும்’ கொரியாவில் அமெரிக்கத் துருப்புகளுக்கு உதவி அனுப்ப—அந்த உதவி பெயரளவில் வைத்திய உதவியே ஆயினும்—அது தயங்கவில்லை. மலேய மக்களின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்குவதற்கு கூர்க்கர்களையும் சீக்கியர்களையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் தமது சாவுப் படைகளில் “ரெக்ரூட்” செய்து கொள்வதற்கு அது அனுமதித்துள்ளது. வியத்நாம் மக்கள் குடியரசுக்கு எதிராகப் போராடச் செல்லும் பிரஞ்சு விமானங்களுக்கு, வழியில் இந்தியாவிலே தரையிறங்குவதற்கான தளங்களை அது அனுமதித்துள்ளது. இந்திய கப்பற் படை பிரிட்டிஷ் கப்பற் படையின் பகுதியாக இயங்குகிறது. சர்க்காருடைய பாதுகாப்பு இலாகாவின் இராணுவ நுணுக்கங்களுக்குத் திறவுகோல் பிரிட்டிஷ் ஆலோசகரிடம் உள்ளது. அவர்

களே அதை ஆட்டிவைக்கும் சூத்திரதாரிகள். ஒரு நாட்டின் இராணுவத்தினுடைய சுயேச்சைத் தன்மையே, அந்நாட்டின் அரசுரிமைக்கும் சுதந்திரத்திற்கும் அடையாளமாகும் என்பது உண்மையானால், நம்முடைய நாட்டு சுதந்திரத்தின் கேந்திரப் பகுதி இன்னமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கையிலேயே உள்ளது என்பது உண்மை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிபணிந்திருக்கும் இந்நிலைமையுடன் விஷயம் முற்றுப்பெற்று விடவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நமது பொருளாதாரத்திலும் வாழ்விலும், நமது அரசாங்க விவகாரங்களிலும் தலையிட்டு ஊடுருவிப் பாய்வதற்கு இட்டுச் செல்வதாகவுள்ளது, இந்திய சர்க்காரின் கொள்கைகள். பிரிட்டிஷ் மூலதனத்தோடு கூடவே மற்றொரு அன்னிய நாட்டின்—அமெரிக்காவின் மூலதனத்திற்கு நாம் அடிமையாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

13. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தமது ஆட்சியை புதிய காங்கிரஸ் சர்க்கார் என்ற போர்வையின் மூலம் மூடி மறைப்பதற்கு முன்பு, நாட்டை இந்து—முஸ்லிம் கலவரத்தில், படுகொலைகளில் ஆழ்த்தினர். அதன் பிறகு அவர்கள் இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு அரசாங்கங்களாக நாட்டைப் பிரித்தனர். ஏகாதிபத்தியவாதிகள் இவ்வாறு செய்ததின் மூலம், இந்தியாவின் பொருளாதாரம் விவசாயத்திலும், பாக்கிஸ்தானின் பொருளாதாரம் தொழிலியலிலும் பலவீனமடையும்படி செய்தனர். இவ்வாறு அவர்கள், இவ்விரு அரசாங்கங்களையும் எதிரும் புதிருமாக நிற்கும்படி, பிரகடனம் செய்யப்படாத பரஸ்பர யுத்த நிலையில் நிற்கும்படி, "நடுநிலைமையான மூன்றாம் கட்சியினர்" என்று சொல்லிக் கொள்ளும் ஏகாதிபத்தியவாதிகளைச் சார்ந்து நிற்கும்படி செய்துள்ளனர்.

நாடு பிரிவினை செய்யப்பட்டதானது இந்து—முஸ்லிம் யுத்த ஜன்னியிலே மக்களின் நியாயமான கோரிக்கைகளை, அடித்து வீழ்த்துவதற்கு காங்கிரஸ் சர்க்காருக்கு உதவியாக இருந்தது. மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்படக்கூடிய பணத்தை சர்க்கார் ஆயுத உற்பத்திக்கு செலவிடுவதற்கு அது உதவியாய் இருந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து ஆயுத தளவாடங்களை வாங்குவதற்கு அது

அவர்களுக்கு உதவியது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளும் தாம் இந்தியாவிடமும், பாக்கிஸ்தானிடமும் பட்டுள்ள ஸ்டர்லிங் கடனுக்கு மாற்றாகத் தமது பழைய சரக்குகளையும், ஆயுதங்களையும் விற்றுத் தொலைப்பதை மிகவும் விரும்பினர். இவ்வாறு நமது மக்களுக்கு இயந்திர சப்ளையும், ஜீவாதாரமான சரக்குகளும் கிடைக்காதவாறு செய்வதைவிட அவர்கள் வேறு எதையும் அதிகமாக விரும்பவில்லை.

14. தத்தம் சுதந்திர வளர்ச்சிக்கு உத்திரவாதம் வேண்டுமென்றும், முன்பு பிரிட்டிஷ் மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் தேசிய இனத் தாயகங்களை பிரித்துச் சேர்த்து வைத்திருப்பதை மாற்றி ஐக்கிய இந்தியாவில் சுயாட்சி செலுத்தும் மொழிவாரி மாகாணங்களை அமைக்க வேண்டுமென்றும் பல்வேறு தேசிய இனங்கள் போட்ட கோரிக்கைகளை நசுக்கித் தேய்ப்பதற்கு தேசப் பிரிவினையும் வகுப்புவாத மதவெறி கலகமும் பயன்படுத்தப்பட்டது ஒரு ஐக்கியநாடு என்பதன் பெயரால் நாட்டின் ஒருபகுதியினுடைய மொழியான ஹிந்தி, சகல தேசிய இனங்களுடையவும் ராஜ்ஜியங்களுடையவும் கட்டாய அரசாங்க மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இத்தேசிய இனங்கள் அனைத்தின் சொந்த தேசிய மொழிகளுக்கு குந்தகம் விளைவிக்கப் பட்டுள்ளது. ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த அகண்ட பிரதேசங்களும், லட்சோப லட்சக் கணக்கான மக்களும், மற்றொரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் மேலாதிக்கம் வகிக்கும் சர்க்கார்களின் கீழும், அதிகாரிகளின் கீழும் வாழும்படி நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். தமக்கே உரித்தான பொருளாதாரமும், கலாச்சாரமும் கொண்டிருக்கும் மலை ஜாதியினர் வசிக்கும் பரந்த பிரதேசங்கள் அனைத்தும் ஏதாவது ஒரு அன்னியக் குழுவைச் சேர்ந்த சிலப் பிரபுக்களுடையவும், பணமூட்டைத் திமிங்கலங்களுடையவும் கையில், அவர்கள் தயவைநாடி நிற்கும்படி ஒப்படைக்கப்படுகின்றன. இவ்வாறு மக்களிடையில் ஒரு ஐக்கியநாடு வேண்டும் என்பதற்கு ஆதரவாகவுள்ள விருப்பத்தை உண்மையில் பிரிவினையையும், மோதலையும் அவர்களிடையில் உண்டாக்குவதற்கு பயன்படுத்துகின்றனர்.

15. சட்ட சபைகளிலே சண்டமாருதங்கள் நிகழ்த்தி, அதற்காக கோடிக்கணக்கில் மக்களின் பணத்தைச் செலவிட்ட பிறகு, இறுதியில், தான் ஒரு மக்கள் சர்க்கார் என்று காட்டிக்

கொள்ளும்பொருட்டு, இந்திய சர்க்கார் ஒரு அரசியல் சட்டத்தை உற்பத்தி செய்துள்ளது. அதை ஒரு ஜனநாயக பூர்வமான அரசியல் சட்டம் என்று அது அழைக்கிறது. அந்த அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே, மக்கள் தமது சொந்த விருப்பத்திற்கு உகந்த ஒரு சர்க்காரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அமுலுக்குக் கொண்டுவந்து அவற்றை அனுபவிக்குமாறும், அது மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது. இவ்வாறு, மக்கள் தாம் விரும்பினால் இன்றுள்ள யதேச்சாதிகார ஆட்சியை ஒழித்துக்கட்ட முடியும் என்றும் சுதந்திர இந்தியக் குடியரசின் இந்த "ஜனநாயக பூர்வமான" அரசியல் சட்டத்தின் மூலம் தமது சுதந்திரத்தை இயங்கவைத்துக்கொள்ளமுடியும் என்றும் மக்களுக்குக் கூறப்படுகிறது

16. வயதுவந்த சர்வ ஜனங்களுக்கும் வாக்குரிமை என்பது, இந்தியாவின் அரசியல் சட்டத்தில் தற்பொழுது இடம் பெற்றுள்ளது என்பது வாஸ்தவமேயாகும். மக்கள் அதை உபயோகித்துக் கொள்ள முடியும், நிச்சயமாக உபயோகித்துக் கொள்வார்கள் என்பதும் உண்மையே. ஆயினும் இந்த அரசியல் சட்டத்தின் கீழ் நடக்கும் தேர்தல்களின் மூலம் மட்டுமே நாட்டிலுள்ள நிலப்பிரபுத்துவ-முதலாளித்துவ ஆட்சியையும், நாட்டின் வாழ்வின்மீது இருந்துவரும் ஏகாதிபத்தியப் பிடியையும் ஒழிக்க முடியும் என்று கூறுவது, மக்களை மோசடி செய்வதாகும். வயது வந்தோர்க்கு வாக்குரிமை என்பதானது, தொழிலாளி வர்க்கத்தினுடையவும், மக்களுடையவும் பரிபக்குவத்தை அளப்பதற்கு உதவுகின்றது. ஜனநாயகத்தின் சம்பிரதாய பூர்வமான ஒரு அம்சம் அது. ஆனால் நிலம் விவசாயிகளின் சொத்தாக்கப்படாமல் நிலப்பிரபுக்களின் சொத்தாகவே இருந்துவரும் வரையிலும்; நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரின் அதிகாரம் மக்களை வயல்களிலும், பாக்டரிகளிலும் அடிமைப்படுத்திவரும் வரையிலும் ; பத்திரிகைகள், பிரசார இயந்திரங்கள் ஆகியவற்றின் மீதுள்ள மூலதனத்தின் பலம், மக்களைப் பொய்களின் மூலம் மயக்கமுற்றுக் கிடக்கச்செய்துவரும் வரையிலும் ; மக்களைப் பிளவுபடுத்தவும், பலவீனப்படுத்தவும் மத, ஜாதி மோதல்களையும் போட்டிகளையும் பணபலம் பயன்படுத்திவரும் வரையிலும், அரசியல் கட்சிகளுக்கு அதிகாரிகளும் போலீசும் தடைவிதித்துவரும் வரையிலும், பிரஜா உரிமைகளை அவர்கள் ஒடுக்கிவரும் வரையிலும், தம்முடைய அரசியல் அபிப்

பிராயங்களுக்காகவும், நாணயமான சேவைக்காகவும், விசாரணை கூட இன்றி சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளையும் கூட அவர்கள் சிறையிலடைத்து வரும் வரையிலும் இந்த சர்வஜன வாக்குரிமையால் சுரண்டப்படும் மக்களின் உண்மையான ஆர்வ அபிலாஷையையும், உண்மையான நலவுரிமைகளையும் பிரகடனப்படுத்த முடியாது.

17. புதிய அரசியல் சட்டத்தின்கீழ், பொதுமக்களோ, அன்றி அச் சட்டத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காரோ, சுதந்திரம், சுபீட்சம் ஆகியவற்றை நோக்கிச்செல்ல வழிகோல முடியும் என்று சொல்வதும்கூட, மக்களை மோசடி செய்வதேயாகும். எந்த வகையிலும் கட்டாயம் அமுலுக்குக் கொண்டு வரப்படக்கூடிய உரிமைகள் எதையும், இந்த அரசியல் சட்டம் மக்களுக்கு உத்திரவாதம் செய்யவில்லை அதேபோல அதிகாரவர்க்கத்தின் அவசரகால யதேச்சாதிகார பிரகடனங்களின் மூலம் பறிக்கப்பட முடியாத எந்த உரிமைகளையும் அது மக்களுக்கு உத்திரவாதம் செய்யவில்லை. இவ்வாறு அவசரகால யதேச்சாதிகாரப் பிரகடனங்கள் செய்ய உரிமை படைத்துள்ள அதிகாரவர்க்கம் மாற்றப்பட முடியாததாகவும், புனிதமானதாகவும் ஆக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளி வர்க்கத்திற்கு இதர நடுத்தர உழைப்பாளிகளுக்கும் வேலைநிறுத்த உரிமை, ஜீவனச் சம்பள உரிமை, வேலைக்கும் ஓய்வுக்குமான உரிமை ஆகிய இவ்வுரிமைகள் எதுவும் உத்திரவாதம் செய்யப்படவில்லை; இவ்வுரிமைகளை அமுலாக்குவதற்கான நிர்ப்பந்தமும் எற்படுத்தப்படவில்லை. நிலப்பிரபுக்களின் நிலமும் முடியிழந்த, அல்லது முடிசூட்டப்பெற்ற மன்னர்களின் சொத்துக்களும், வருமானங்களும் தீண்ட முடியாத புனிதப் பொருட்களாக்கப்பட்டுள்ளன. நிலமில்லா விவசாயி நிலம் பெற முடியுமாம்; ஆனால் அதை அவன் பணம் கொடுத்தோ அல்லது நிலப்பிரபுவுக்கு நஷ்டஈடு கொடுத்தோதான் வாங்க முடியுமாம்!

ஆனால் நிலத்தை விலைகொடுத்தும், நஷ்டஈடு செலுத்தியும் வாங்குவதற்கு மூலதனம் தேவைப்படுகிறது. கைக்கும் வாய்க்குமாக வாழ்ந்துவரும் கோடிக்கணக்கான விவசாயிகளிடம் மூலதனம் எதும் இல்லை. ஆகவே, எழை விவசாயிகள் நிலமின்றி வாழ வேண்டும்; அவர்கள் வறுமையில் தொடர்ந்து உழலவேண்டும் பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனும், செய்துகொண்டுள்ள பல ஒப்பந்தங்களின்மூலம் இந்திய சர்க்கார், நம் நாட்டிலுள்ள அன்னிய நாட்டு முதலாளிகளின் சொத்துக்களை தீண்டமுடியா வகையாக

வும், புனிதமானவையாகவும் ஆக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவற்றினின்று கிடைக்கும் லாபத் தொகைகளைக்கூட தொடமுடியாத அளவுக்கு உத்திரவாதங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த லாபத் தொகைகளை அன்னிய முதலாளிகள் தாம் விரும்பியவிதத்தில் நம் நாட்டிலிருந்து வெளியே கொண்டு போவதற்கும்கூட உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே சமத்தில் இந்த சர்க்கார், போலீஸ் அதிகாரி தடியடி ஆட்சியினின்று பாதுகாக்கும் உரிமையை பிரஜைகளுக்கு உத்திரவாதம் செய்ய மறுத்து வருகிறது. இதைப்போலவே, லேவாதேவிக்காரர்களும் லாபவேட்டைக்காரர்களும் கொள்ளை அடித்து வருவதினின்று பாதுகாக்கும் உடமையையும் உத்திரவாதம்செய்ய மறுத்து வருகிறது.

இவ்வாறாக, நிலப்பிரபுக்கள், மன்னர்கள், ஏகாதிபத்தியவாதிகள் ஆகியவர்களின் பிடிப்பு, நமது பொருளாதாரம், நிலம், மூலதனம் ஆகியவற்றின்மீது தொடர்ந்து நிலவி வருவதற்கு அரசியல் சட்டம் உத்திரவாதம் அளிக்கிறது. ஆனால் அதே சமயத்தில், நம்முடைய மக்களின் வாழ்வு, விடுதலை ஆகியவை சம்பந்தப்பட்ட ஒரு அம்சத்தைக்கூட அது உத்திரவாதம் செய்யவில்லை. ஜபமந்திரம் போன்று மாயவலை வீசும் வெறும் விருப்பங்களையே அது உச்சரிக்கிறது. இந்த அரசியல் சட்டம் ஒரு உண்மையான ஜனநாயக அரசியல் சட்டமே அல்ல. அவ்வாறு அதை அழைக்க முடியவே முடியாது. ஆனால் அது, அன்னிய ஏகாதிபத்திய நலவுரிமைகளுடன்–பிரதானமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நலவுரிமைகளுடன்–பிணைக்கப்பெற்ற ஒரு நிலப்பிரபுத்வ—முதலாளித்வ அரசாங்கத்தின் அரசியல் சட்டமேயாகும்.

18. வறுமைக்கும், சட்டவிரோதமான ஒரு ஆட்சிக்கும் மக்களைப் பலியிட்டுள்ள மேலே வருணிக்கப்பட்ட பயங்கரமான நிலைமைகளின் காரணமாய், பொதுமக்கள் இன்றைய அரசாங்கத்தினிடம் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டனர். அதன்பால் அவர்கள் மிகவும் ஆழ்ந்த அவநம்பிக்கை கொண்டு வருகின்றனர். மக்களுக்கு எதிராக, நிலப்பிரபுக்கள், லேவாதேவிக்காரர்கள், இன்னும் இதர சுரண்டும் கூட்டத்தினர் ஆகியோருக்குப் பாதுகாப்பு அளித்துவரும் தங்களுடைய விரோதியே இந்த சர்க்கார் என்று அதை அவர்கள் கருத ஆரம்பித்து வருகின்றனர். இது முற்றிலும் இயற்கையேயாகும். மேலும் பல மாகாணங்களிலே, இன்றைய சர்க்காரின் மனிதத் தன்மையற்ற ஆட்சிக்கு

எதிராகத் தமது அதிருப்தியையும், கலகத்தையும் பொதுமக்கள் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துகின்றனர். மக்களுடைய ஆர்வ அபிலாஷைகளையும் நலவுரிமைகளையும் பிரதிபலிக்கும் சக்தி கொண்ட, நிலப்பிரபுக்கள், முதலாளிகள், லாப வேட்டைக்காரர்கள், லேவாதேவிக்காரர்கள், அன்னிய ஏகாதிபத்தியவாதிகள் ஆகியவர்களுக்கு எதிராகத் தம்மைப் பாதுகாக்கும் சக்திபடைத்த ஒரு புதிய மக்கள் ஜனநாயக சர்க்காரை, இன்றுள்ள சர்க்காருக்குப் பதிலாக ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைக் காண அவர்கள் முயன்றுகொண்டு வருகின்றனர்.

19. இந்நிலைமைகளின் கீழ், கம்யூனிஸ்ட் கட்சி சரியானதென்று கருதும் காரியசாத்தியமான கடமைகளையும் காரியசாத்தியமான திட்டங்களையும், மக்கள்முன் வரையறுத்துக் கூறவேண்டியது தனது கடமை என்று கம்யூனிஸ்ட்கட்சி உணர்கிறது. இவற்றை நடைமுறையில் மக்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தாகவேண்டும்; அப்பொழுதுதான் இன்றைய சர்க்காரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் முட்டுக்கட்டையை அவர்களால் தகர்க்க முடியும்; தங்களது சுதந்திரத்தையும், சுபீட்சத்தையும் அவர்கள் அடையமுடியும்.

நமது வளர்ச்சியின் இன்றைய கால கட்டத்தில், நமது நாட்டில் சோஷலிஸத்தை நிறுவியாக வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி கோரவில்லை. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் பிற்பட்ட தன்மையை உத்தேசித்தும், தொழிலாளர்கள், விவசாயிகள், பாடுபடும் படித்த கூட்டத்தார்களின் வெகுஜன ஸ்தாபனங்களின் பலஹீனமான தன்மையினாலும், நம் நாட்டில் சோஷலிஸ சமுதாய மாற்றங்களை இன்றைய நிலையில் ஏற்படுத்த முடியுமென்று நமது கட்சி கருதவில்லை. ஆனால், இன்றைய ஜனநாயக-எதிர்ப்பு, பொதுஜன விரோத சர்க்காரை—மாற்றியமைக்க வேண்டியதற்கான சரியான தருணமிது என்று நமது கட்சி கருதுகிறது: மக்கள் ஜனநாயகத்தின் புதிய சர்க்காரை அதற்குப் பதிலாக நிறுவ வேண்டிய பக்குவமான காலம் இது என்று கருதுகிறது, நாட்டிலுள்ள சகல ஜனநாயக, நிலப்பிரபுத்வ-எதிர்ப்பு, ஏகாதிபத்திய-எதிர்ப்பு சக்திகளடங்கிய ஐக்கியக் கூட்டணியின் அடிப்படையில் அத்தகைய புதிய மக்கள் ஜனநாயக சர்க்கார் அமைக்கப்பட வேண்டும்; அத்தகைய சர்க்கார் மக்களின் உரிமைகளுக்கு சரியான உத்தரவாதம் வழங்குவதாயிருக்கும்; விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கும்; வெளிநாட்டுச் சாமான்கள்

போட்டியை சமாளிக்கின்ற முறையில் நமது தேசிய தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்; தேசத்தை தொழில் மயமாக்க வழி வகுக்கும்; தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்த உத்தரவாதமளிக்கும்: மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றும்; இவைகளின் மூலம் முன்னேற்றம், கலாச்சார வளர்ச்சி, விடுதலையை நோக்கிச் செல்லும் ராஜ பாட்டையில் நாட்டை வழி நடத்திக் கொண்டு போகும்.

புதிய மக்கள் ஜனநாயக சர்க்கார் என்னென்ன காரிய சாத்தியமான கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது?

அத்தகைய கடமைகள் கீழ் வருமாறு:

அரசாங்க அமைப்புத் துறையில்

20. மக்களின் ராஜ்யாதிகாரம், அதாவது தேசத்தின் அதிகாரம் அனைத்தும் ஒருங்கே மக்களிடம் இருக்கும். அரசின் மேலாதிக்கம் முழுவதும் மக்களின் பிரதிநிதிகளிடமே இருக்கும். இந்தப் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; இவர்கள் எந்த சமயத்திலும், வாக்காளர்களில் பெரும்பாலோர் விரும்பினால் ராஜீநாமா செய்துவிட வேண்டும்; இவர்கள் அடங்கிய ஒரே பிரதிநிதிகள் சபை—ஒரே சட்ட சபை—இருக்கும்.

21. குடியரசுத் தலைவரின் உரிமைகள் வரையறுக்கப்படும்; அதனால், சட்டசபையின் மூலம் நிறைவேற்றப்படாத சட்டங்களை பிரகடனம் செய்யும்படியான உரிமை ஜனாதிபதிக்கோ, அல்லது அவரால் நியமிக்கப்படுபவர்களுக்கோ இருக்காது. ஜனாதிபதி சட்டசபையினால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

22. 18 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகள் ஆண், பெண்களுக்கும் சட்ட சபை, இதர மாகாண சுயாட்சி சபைகளுக்கும் நடக்கும் தேர்தல்கள் அனைத்திலும் சர்வஜன, சமத்துவ, நேரடி ஓட்டு உரிமை உண்டு; ரகசிய ஓட்டளிக்கும் முறை உண்டு; எந்த பிரதிநிதித்வ சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட எந்த வாக்காளர்களுக்கும் உரிமை உண்டு; மக்கள் பிரதிநிதிகளுக்கு சம்பளம் உண்டு. எல்லா தேர்தல்களிலும் அரசியல் கட்சிகளுக்கு விகிதச்சார பிரதிநிதித்வம் உண்டு

23. விரிந்த அளவில் சர்க்கார் ஸ்தலஸ்தாபனங்கள் அமைக்கவும், மக்கள் கமிட்டிகள் மூலம் அவைகளுக்கு அதிகாரங்கள்

நிறைய உண்டு. சகல மாகாண, ஸ்தல ஸ்தாபன நிர்வாக அதிகாரிகளை (கவர்னர்கள், மாஜிஸ்ட்ரேட்கள், கமிஷனர்கள் முதலியோர்) மேலிருந்து நியமிக்கப்படுவது ஒழிக்கப்படும்.

24. நபர் பாதுகாப்பு, குடியேற்றம் ஆகியவற்றிற்கு ஹானி ஏற்படாது; மனச்சாட்சியின்படி நடக்க, பேச, பிரசுரிக்க, கூட்டங்கூட, வேலைநிறுத்தம் செய்ய, ஒன்றுகூட, தங்கு தடையற்ற சுதந்திரம் உண்டு. மத நம்பிக்கைக்கும், கடவுள் வழிபாட்டுக்கும் உரிமை உண்டு; இஷ்டப்பட்ட இடத்திற்குப் போக, வசிக்க சுதந்திரம் உண்டு.

25 சகல பிரஜைகளுக்கும் ஜாதி, மத, இன, வர்ண, ஆண் பெண் பேதா பேதமின்றி சம உரிமைகள் உண்டு. ஒரே விதமான ஒரே வேலைக்கு ஒரே மாதிரியான சம்பளம், ஆண், பெண் பேதமின்றி வழங்கப்படும்.

பெண்களை வருத்தும் சமூக முட்டுக்கட்டைகள் ஒழிக்கப்படும். சொத்து, சுதந்திரங்களுக்கு வாரிசாகும் உரிமை, விவாக ரத்து சட்டங்கள், வேலைகள் தொழில்களில் அமர்வது ஆகிய விஷயங்களில் ஆண்களுடன் பெண்களும் சமஉரிமை அடைந்து அவற்றை அனுபவிப்பதற்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கப்படும்.

பழக்க வழக்கங்கள், பரம்பரைமுறை அல்லது மதம் ஆகியவற்றின் பெயரால் ஒரு ஜாதியினரை மற்றொரு ஜாதியினர் சமூகரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஒடுக்குமுறை செய்வதும், மேல்ஜாதியினர் எனப்படுபவர்கள் கீழ்ஜாதி மக்களின்மீது குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர்மீது சமூகரீதியிலும் தனிப்பட்ட முறையிலும் தடைகள், தடங்கல்களைத் திணிப்பதும் ஒழிக்கப்படுவதுடன் சட்டப்படி தண்டனைக்குரித்தானதாக செய்யப்படும்.

சிறுபான்மை மதத்தினர்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டப்படமாட்டாது. இதற்கான பாதுகாப்பு அளிக்கப்படும்.

26. சகல தேசிய இனங்களுக்கும் சுய-நிர்ணய உரிமை உண்டு. இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களை, ஒரு பொதுவான அரசை ஸ்தாபிப்பதற்காக பலாத்காரமாக அல்லாமல் அவர்களது இஷ்டபூர்வமான சம்மதத்தைப் பெற்று அவர்களை இந்தியக் குடியரசு ஐக்கியப்படுத்தும்.

27. இன்று இந்திய யூனியனிலுள்ள ராஜ்யங்களின் எல்லைகளை பொது மொழியின் அடிப்படையில் மாற்றி யமைப்பது.

மன்னர் சமஸ்தானங்களைக் கலைத்து, அவற்றை அண்டையிலுள்ள பொருத்தமான தேசிய ராஜ்யங்களுடன் இணைப்பது. அன்னிய ஏகாதிபத்யங்களின் வசமுள்ள பிரதேசங்கள் மீட்கப்பட்டு அதே அடிப்படையில் இணைக்கப்படும். தனித்த அம்சம் நிறைந்த ஜனத்தொகையைக் கொண்டதும் விசேஷமான சமூகப் பழக்க வழக்கங்களைக் கொண்ட மலை, ஜாதியார் வாழ்வதுமான பிரதேசம் அல்லது தேசிய சிறுபான்மையோர் வாழும் பிரதேசமோ பரிபூரண பிரதேச சுயாட்சி கொண்டதாகவும், பிரதேச சர்க்கார்கள் அமைந்ததாகவும் இருக்கும். இவற்றின் வளர்ச்சிக்கும் பூரண உதவி அளிக்கப்படும்.

28. தொழில், விவசாயம், வியாபாரம் ஆகியவற்றில் தரவாரியான வருமானவரி விதிக்கப்படும்; தொழிலாளர்கள், விவசாயிகள், கைத்தொழில் செய்பவர்கள் ஆகியோருக்கு அதிகபட்சமான வரிச் சலுகைகள் கொடுக்கப்படும்.

29. கல்வி நிலையங்களில் தங்கள் தங்கள் தாய் மொழியில் கல்விபெறுவதற்கு மக்களுக்கு உரிமைஉண்டு; எல்லாபொது ஸ்தாபனங்களிலும், சர்க்கார் காரியாலயங்களிலும் தாய் மொழியே உபயோகிக்கப்படும். எங்கெல்லாம் அவசியமோ அங்கு ஒரு சிறுபான்மையினரின் அல்லது பிரதேசமொழி அந்த தேசிய இன மொழியுடன் கூட உபயோகிக்கப்படுவதற்கு வசதிகள். அகில இந்திய சர்க்கார் மொழியாக இந்தியை உபயோகிக்க வேண்டுமென்பது கட்டாயமல்ல.

ஹிந்துஸ்தானி பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் உருது, தேவநாகரி எழுத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும். இவ்விரண்டு எழுத்துகளில் எதையும் கையாள மக்களுக்கு உரிமை வழங்கப்படும்.

30. தங்களுடைய மொழியையும் கலாச்சாரத்தையும், தங்களுடைய முறையிலேயும், தேசம் பூராவிலுமுள்ள ஜனநாயக வெகுஜனங்களின் பொதுவான அபிலாஷைகளோடு இணைந்தும் வளர்ப்பதற்கு மலை ஜாதியினர் உள்ளிட்ட எல்லா தேசிய இனங்களுக்கும் உதவி அளிப்பது.

ஜனநாயகப் பொதுமக்கள் தமது வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்துகொள்ளவும், வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ளவும் நடத்தும் போராட்டங்களுக்கு உதவவேண்டும்.

உழைப்பாளி மக்களிடையில் நிலப்பிரபுத்துவ–பூர்ஷுவா வர்க்கங்கள் தலைமுறை தலைமுறையாக, பரப்பிவரும் ஜாதி மத வெறுப்பு, ஜாதிமத தப்பெண்ணங்கள், பயத்தையும் பீதியையும் அடிமை மனப்பான்மையையும் ஊட்டும் கருத்துகள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிலிருந்து அவர்களை விடுபடும்படிச் செய்ய உதவுவது.

—சகல நாடுகளிலுமுள்ள சமாதான பிரேமிகளான மக்களின் பால் சகோதரத்துவ உணர்வை வளர்த்துக் கொள்வதற்கு சகல மக்களுக்கு உதவுவதுடன், இன, தேசிய வெறுப்புக் கருத்துகளை ஒழிக்க உதவவேண்டும்.

—ஏகாதிபத்திய யுத்தப் பிரசாரத்தை எதிர்ப்பதுடன் மக்கள் சமாதானமும், சுதந்திரமும் பெற உதவுவது.

31. மக்கள் நீதிமன்றத்தின் முன் எந்த அதிகாரியையும் கொண்டுவந்து நிறுத்தி விசாரிக்க சகலருக்கும் உரிமை உண்டு.

32. சகல மத ஸ்தாபனங்களிலிருந்தும் சம்பந்தப்படாததாக அரசு விளங்கும்; மதச் சார்பற்ற அரசாக இருக்கும்.

33. 14 வயது வரைக்கும் ஆண், பெண்குழந்தைகளுக்கு கட்டாய ஆரம்ப இலவசக் கல்வி உண்டு.

34. போலீசுக்குப் பதிலாக பொதுஜனப்படை அமைக்கப்படும். கூலிப் பட்டாளம், தண்டனையை நிறைவேற்றுவதற்குரிய பட்டாளம் ஆகியவற்றை ஒழித்து, தேசீய சைன்யம், கடற்படை, விமானப்படைகளை இந்தியாவின் பாதுகாப்பிற்காக, மக்களோடு நெருங்கிய தொடர்புகொண்ட விதத்தில் நிறுவப்படும்.

35. காலரா, மலேரியா இதர கொள்ளை நோய்களை ஒழிப்பதற்கான ஸ்தலங்களாக நாடு முழுவதிலும் வைத்திய ஸ்தாபனங்களையும், ஆஸ்பத்திரிகளையும் விரிந்த அளவில் அமைக்கும்படியான மக்கள் சுகாதார இலாகா ஏற்படுத்தப்படும்.

விவசாயமும் விவசாயிகள் பிரச்சினையும்

விவசாயமும், விவசாயிகள் பிரச்சினையும் நமது தேச வாழ்வில் பிரதான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

விவசாயத்தைப் பெரும் அளவிற்கு அபிவிருத்தி செய்து நாட்டிற்கு வேண்டிய உணவையும், மூலப்பொருள்களையும், நாம் சேகரிக்க முடியாதிருப்பது ஏன்? வறுமை வாய்ப்பட்ட விவசாயி நிலத்தை இழந்து, சாதாரண விவசாயக் கருவிகளைக்கூட வாங்க வக்கற்று இருக்கிறான்; அதனால்தான் விவசாயத்தை அவன் சரிவர செய்ய முடியவில்லை.

நமது தேசியத் தொழில்களை நாம் விருத்தி செய்யமுடியவில்லை; பெரும் அளவிற்கு நமது நாட்டை தொழில் மயமாக்க முடியவில்லை. ஏனெனில், ஜனத் தொகையில் 80 சதவிகிதம் உள்ள வறுமையிலாழ்ந்து கிடக்கும் விவசாயிகள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் ஒரு சிறிதுகூட வாங்க சக்தியற்றிருக்கின்றனர்.

நமது அரசை ஒரு அளவிற்குக்கூட குலையாத நிலையில் வைக்க முடியாததேனென்றால், அரைப் பட்டினி வாழ்க்கை நடத்தும் விவசாயிகளுக்கு சர்க்கார் உதவி கிஞ்சிற்றும் கிடையாததால் அந்த சர்க்காரை வெறுப்பதோடு, ஆதரிக்கவும் மறுக்கிறார்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் நிலைமைகளிலும் ஓரளவுக்குக்கூட மாற்றம் ஏற்படுத்த முடியவில்லை; ஏனெனில் லட்சக்கணக்கான மக்கள் வறுமை வாய்ப்பட்டு, பட்டினிக்கு ஆளாகி, கிராமப் புறங்களை விட்டு நகரங்களுக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதனால் “தொழிலாளர் தொகை” அதிகரிக்கிறது; “உழைப்பிற்கு விலை” மலிந்துபோகிறது; வேலையில்லாதார் பட்டாளம் பெருகுகிறது; அதனால் உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாமல் போய்விடுகிறது.

கலாச்சார பிற்போக்குத் தனத்திலிருந்து நாம் மீள முடியாதது ஏனென்றால், அரைப்பட்டினியில் காலந்தள்ளும் விவசாயிகளின் தொகை, ஜனத்தொகையில் பெரும் பகுதியாயிருப்பதால், தங்களது குழந்தைகளுக்குக் கல்வியளிப்பதற்கான பொருள் வசதிகள் அவர்களிடம் அறவே கிடையாது.

இந்தத் தீமைகள் அனைத்துக்கும் முடிவுகட்டி, நமது நாட்டின் கலாச்சார பிற்போக்குத்தனத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென்றால், விவசாயிகள் மனிதர்களாய் வாழ்வதற்கான நிலைமைகளை

ஏற்படுத்த வேண்டியது அவசியம். நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தை எடுத்து விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டியது அவசியம்.

இதை நிறைவேற்றுவதற்கு, கீழ்க்கண்டவற்றைச் செய்ய வேண்டியது அவசியம்.

36. நிலப்பிரபுக்களின் நிலத்தை இலவசமாக விவசாயத் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் வழங்கி, இந்த சீர்திருத்தத்தை ஒரு விசேஷ நிலச்சட்டத்தின் மூலமாக சட்டபூர்வமாக்க வேண்டும். இவ்வாறு நஷ்டஈடு இல்லாமல் நிலப்பிரபுத்துவத்தை ஒழித்தல்.

37. விவசாயிகள், விவசாயக் கருவிகளை வாங்கவும், தேவைப்படும் விதைகளை வாங்கவும் அவர்களுக்கு நீண்ட காலத் தவணைக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கைத்தொழில் செய்பவர்களுக்கும், மூலப்பொருள்கள் வாங்கிக் கொள்ளவும், அவர்கள் உற்பத்திக்கும், வியாபாரத்திற்கும் உதவும் நீண்டகாலத் தவணைக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுக்க வேண்டும்.

38. விவசாயிகள் பழைய நீர்ப்பாசன வசதிகளைப் பழுது பார்க்கவும், புதிய நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொள்ளவும் அவர்களுக்கு சர்க்கார் உதவியளிக்க வேண்டும்.

39. விவசாயிகள், சிறுதொழில் செய்பவர்கள், லேவாதேவிக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய கடன் தொகைகளை வஜா செய்தல்.

40. விவசாயத் தொழிலாளர்களுக்கு போதிய சம்பளமும் வாழ்க்கை வசதிகளும் செய்து கொடுத்தல்.

தொழிலும், தொழிலாளர் பிரச்சினையும்

விவசாயிகளின் வாங்கும் சக்தி மிகவும் குறைவாக இருப்பதால் மட்டுமல்ல நமது தேசியத் தொழில்கள் வளராமலிருப்பது; நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அன்னிய நாட்டுப் பொருள்களின் போட்டியாலும் அவை வளர்வதில்லை படுமோசமான அன்னிய நாட்டுப் போட்டியிலிருந்து சர்க்காரால் பாதுகாக்கப் படாத சுதேச வியாபாரப் பண்ட உற்பத்தியாளர்கள், மேலே கூறப்பட்ட அன்னியநாட்டுப் பொருள்களின் போட்டியினால் தங்க

ளுக்கு ஏற்படும் நஷ்டத்தைச் சரிக்கட்ட தொழிலாள வர்க்கத்தின் மீது பளுவைச் சுமத்தி, அதன் நிலைமைகளை சீர்கேடடையச் செய்கின்றார்கள். ஆனால், தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகள் மோசமடைந்தால், தொழில்கள் வளர முடியாது. ஏனெனில் இன்றைய தொழில் வளர்ச்சிக்கு, வறுமை நிலையில் பணம் கையில்லாத தொழிலாளியால் உருப்படியாக உதவ முடியாது. இதுவும், நமது தேசீயத் தொழில் சரியான வளர்ச்சி யடையாததற்கு மற்றொரு காரணமாகும். இந்த விஷச் சக்கரத்திலிருந்து மீள வேண்டுமானால், வெளிநாட்டுப் பொருள்களின் போட்டியிலிருந்து நமது தேசியத் தொழிலைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்; தேசம் முழுவதையும் தொழில் மயமாக்கும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்; தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்தவேண்டும். இதைச் சாதிக்க, கீழ்க்கண்டவற்றைச் செய்யவேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

41. நாட்டில் இறக்குமதியாகும் அந்நியநாட்டுப் பொருள்களின் போட்டியிலிருந்து தேசீயத் தொழில்களைக் காப்பாற்றுவதற்குரிய சட்டங்கள் இயற்றப்படவேண்டும்.

42. தேசீயத் தொழிலை அபிவிருத்தி செய்யவும், நாட்டைத் தொழில் மயமாக்குவதற்குரிய நிலைமைகளை உண்டாக்கவும் சகல விதமான சக்திகளையும், சாதனங்களையும் சர்க்கார் உபயோகிக்க வேண்டும்.

43 மக்களின் நலவுரிமைகளின் நிமித்தம், நாட்டின் பொருளாதாரத்தினுடைய பல்வேறு பகுதிகளை ஒழுங்குபடுத்தி, ஒருமைப்படுத்தி தேசத்தின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்வது.

44. தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைகளையும், தொழில் வசதிகளையும் பெருமளவிற்கு உயர்த்தும் பொருட்டு, வாழ்க்கைச் சம்பளம் நிர்ணயிக்க வேண்டும்: சகல தொழில்களிலும், வர்த்தக ஸ்தலங்களிலும் 8 மணி நேர வேலை, 44 மணி நேர வாரம் அமுல் நடத்தப்படவேண்டும்! சுரங்கங்களிலும், உடல் நலத்தைப் பாதிக்கும்படியான தொழில்களிலும் 6 மணி நேர வேலையை அமுலுக்குக் கொண்டுவருதல்; அரசாங்கம், முதலாளிகள் செலவில், வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்தும் வேலை செய்ய முடியாத நிலைமையிலிருந்தும் பாதுகாப்பு அளிக்க சமூக

இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்தல்; தொழிற்சங்கங்களோடு சேர்ந்து வேலை செய்யும்படியான லேபர் எக்சேஞ்ஜுகள் (தொழிலாளருக்கு வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்கள்) ஏற்படுத்துதல்; தொழில் கோர்ட்டுகள் அமைத்தல்; தொழிற்சங்கங்களை அங்கீகரித்து, கூட்டுமுறையில் பேரம் பேசுவதற்கு உரிமை வழங்குதல்.

45. பொதுஜனத் தேவைகளுக்குப் பயன்படும் பண்டங்களின் விலையை பயனுள்ள முறையில் கட்டுப்படுத்துதல்.

46. அகதிகள் பிரச்சினையை, குறிப்பாக தாங்கள் வாழ்ந்த பிரதேசத்தைவிட்டு வெளியேறிய தொழிலாளர்கள், விவசாயிகள், கைத்தொழில் செய்பவர்கள், மத்தியதர வர்க்க சிப்பந்திகள் முதலானோர் வெகு சீக்கிரத்தில் சர்க்கார் அவர்களைக் குடியேற்றுவதன் மூலம் தீர்க்கவேண்டும்; விசேஷமாக அவர்களுக்கு நிலம் வழங்கி தொழிலுக்குரிய சாதனங்களைக் கொடுத்து, தங்களது சொந்த தேசீய இனப்பண்பை யொட்டிய தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ளும் வசதிகளையும், வேலையையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இந்திய தேசீய விடுதலை

பிரிட்டிஷார் நமது நாட்டைவிட்டு வெளியேறி விட்டார்கள் என்று எவ்வளவு தம்பட்ட மடித்தாலும், வருஷா வருஷம் கோடிக்கணக்கான லாபம் தரக்கூடிய தொழிற்சாலைகள், ஒர்க் ஷாப்புகள், சுரங்கங்கள், தோட்டங்கள், கப்பல் கம்பெனிகள், பாங்கிகள் பல இன்னும் இந்தியாவில் பிரிட்டிஷ் முதலாளிகளுக்குச் சொந்தமானவை என்பது உண்மை. நமது பொருளாதார வாழ்விலே இத்தகைய ஆதிக்கமும் அவர்களோடு கூடிக் குலாவும் நமது நாட்டிலுள்ள பெரும் முதலாளிகளுடன் உறவும், தொடர்புகளும் வைத்துக்கொண்டு, இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் திரைமறைவில் இருந்து கொண்டு, தங்களது கூட்டாளிகளுடன் நமது தொழில்கள் அபிவிருத்திக்குக் குந்தகம் விளைவித்து நம்மை நிரந்தர தொடர்ச்சியாக வறுமையில் ஆழ்த்தி வைக்கிறார்கள்.

மிகப் பரந்த அளவில் நமது நாட்டை நாம் தொழில்மயமாக்காவிட்டால், நமது நாடு பலம் வாய்ந்த, சுபிட்சம் நிறைந்த நாடாக ஆகமுடியாது. இந்த அளவில் தொழில்மயமாக்குவதென்

பது, பிரிட்டிஷ் மூலதனம் இந்தியாவில் இருக்கும்வரை சாத்தியமில்லை; பிரிட்டிஷ் கம்பெனிகள் மூலம் கிடைக்கும் லாபங்களை நாட்டைவிட்டுக்கொண்டுபோய் விடுகின்றார்கள்; அந்தத் தொகைகளை நமது தொழில்களைப் பெருக்குவதற்காக உபயோகப்படுத்த முடியவில்லை; மேலும், தேசிய பெரும் பூர்ஷுவாக்களும், அவர்களது கூட்டாளிகளும் சாம்ராஜ்ய சக்கரத்தில் சேர்த்துப் பிணைந்துள்ள வரைக்கும் தொழில்மயமாக்குவது சாத்தியமில்லை.

அது தவிர, நமது கடற்படை, சேனை, போலீஸ், இதர கூலிப்பட்டாளங்கள் ஆகியவற்றில் நிறைந்துள்ள பல பிரிட்டிஷ் ஆலோசகர்களையும் நாம் கணக்கிலெடுத்து மதிப்பிட்டாகவேண்டும்.

ஒரு உண்மையான சுதந்தர அரசாக நாம் ஆகவேண்டுமானால், சாம்ராஜ்ஜியத்திலிருந்து இந்தியா, தன்னைத் துண்டித்துக் கொள்ளவேண்டும்; தேசத்தின் பொருளாதாரத்தில் பிரிட்டிஷ் மூலதனம் ஆதிக்கம் வகிப்பதை அகற்றியாகவேண்டும்; பிரிட்டிஷ் ஆலோசகர்களுக்கும் சீட்டுக் கிழித்து அனுப்பிவிடவேண்டும்

ஆகவே, கீழ்கண்டவைகள் அவசியம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது;

47. பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்தும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்தும் இந்தியா விலகிக்கொள்ள வேண்டும்.

48. சகல தொழிற்சாலைகள், பாங்குகள், தோட்டங்கள், கப்பல் கம்பெனிகள், சுரங்கங்கள் இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களுக்குச் சொந்தமாக இருக்கும் மூலதனத்தையும், அவை பிரிட்டிஷார்கள் பெயரிலிருந்தாலும் சரி, அல்லது இந்தியக் கம்பெனிகள் பெயரால் போர்டைத் தொங்கவிட்டுக்கொண்டிருந்தாலும் சரி பறிமுதல் செய்யப்பட்டு தேசிய மயமாக்கப்படவேண்டும்.

49. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆலோசகர்களை அவர்கள் பதவிகளிலிருந்து விலக்கியாகவேண்டும்.

இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைகள்

இந்தியாவிற்கு சமாதானம் தேவை; சமாதானமான வளர்ச்சி தேவை. சகல அரசுகளோடும் பொருளாதார ஒத்துழைப்புக்

கொள்ளவேண்டுமென்பதிலும், சமாதானத்திலும் இந்தியாவிற்கு மிகுந்த அக்கறை உண்டு. இந்த விஷயத்தில், பிரிட்டன், இந்தியாவோடு பரிபூரண சமத்துவ அடிப்படையில் பொருளாதார ஒத்துழைப்பைத் தரத் தயார் என்பதை மெய்ப்பித்துவிட்டால், பிரிட்டனும் இதற்கு விதிவிலக்கு இல்லை. சமாதானத்திற்கும், யுத்தத்திற்கும் இடையே சமாதானப் போர்வீரர்களுக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கிளறிவிடுபவர்களுக்கு மிடையே இன்றைய இந்திய சர்க்கார் நடத்தும் போலி வாதப் பிரதிவாதங்கள் இந்திய மக்களுக்குள்ள நலவுரிமைகளுக்கு விரோதமானவையாகும்.

சமாதானத்தின் பிரதான விரோதியும், ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கிளறி விடுவதுமான பிரதான விரோதி அமெரிக்காதான்; சகல ஆக்கிரமிப்பு நாடுகளையும் தன் பக்கம் அது இழுத்து வைத்துக் கொண்டுள்ளது. இந்த யுத்த முகாம்,—சோவியத் யூனியன், சீனமக்கள் குடியரசு, இதர மக்கள் ஜனநாயக நாடுகள் ஆகியவை சேர்ந்துள்ள சமாதான முகாமை எதிர்த்து நிற்கிறது. ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சமாதானப் போர் வீரர்களோடு கைகோர்த்து நின்று, அமெரிக்காவை முதல் நம்பர் ஆக்கிரமிப்பாளர்களென்று குற்றம் சாட்டுவதைவிட்டு, இந்த இரண்டு முகாம்களுக்கு மிடையே சந்தேகப் படத்தக்க ஒரு பாத்திரத்தை இந்திய சர்க்கார் வகித்து வருகிறது: அமெரிக்காவோடு காதல் புரிகிறது. இது, சமாதானத்தை விரும்பும் நாடுகளுக்கு எதிராக ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதலைத் தொடுப்பதற்கு அநுசரணை செய்வதாகும். சமாதானத்திற்கும் யுத்தத்திற்கும் இடையே வாதப் பிரதிவாதம் நடத்திக்கொண்டிருப்பதல்ல இந்தியாவின் வேலை; சமாதானத்தை விரும்பும் நாடுகளோடு ஐக்கிய அணியில் நின்று அவர்களோடு நேசத்தொடர்பு கொள்வதாகும்.

இன்று இந்திய யூனியனும் பாகிஸ்தானும் ஈடுபட்டுள்ள எரிந்த கட்சி எரியாக் கட்சி போட்டியிலும் இந்திய மக்களுக்குக் கொஞ்சமும் அக்கறை கிடையாது; இன்றைய இந்திய சர்க்கார் இத்தகைய போட்டியை நிறுத்துவதாகத் தெரியவில்லை.

நாட்டை இரண்டாக்கியதன் மூலம் இந்தியாவின் பொருளாதாரம் முழுவதும் நிலை தடுமாறி விருப்பதும், இந்திய—பாகிஸ்தான் தகராறும், மக்களைப் பிரிப்பதற்கு பிற்போக்கு ஆளும் கும்

பலுக்கு உதவி செய்வதுடன், ஆங்கிலோ—அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் காஷ்மீரில் செய்துள்ளதுபோல் நம் நாட்டு விவகாரங்களில் தலையிட்டு, நம்மிரு நாடுகளின் மீதும் அவர்களது ஆதிக்கத்தை அதிகரித்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் அளிக்கிறது- இந்தியா—பாகிஸ்தான் அரசுக்குமிடையே நிலையான நேச உறவும் பரஸ்பர உதவியும் ஏற்படுவதன் மூலமாகவே நிலைமையை சமாளிக்க முடியும். இத்தகைய சகோதரக் கூட்டுறவில் இலங்கை அரசும் நேப்பாள அரசும் அங்கமாக இருக்கமாக வேண்டும்.

இலங்கையின் பொருளாதாரம், இந்தியாவைச் சார்ந்தும் ஒட்டியும் இருப்பதாலும் இலங்கையிலுள்ள பெரும் பகுதி மக்கள், இலங்கையில் குடியேறுவதற்குச் சென்ற இந்தியத் தோட்டத் தொழிலாளிகளும் இதர தொழில் செய்பவர்களுமாவர், இலங்கை, இந்திய நிலச்சுவான்தார்களும், வியாபாரிகளும் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைத் தொழிலாளர்களுக்கிடையே பகையை மூட்டிவிட்டு தங்களது சுயநலப் பேராசையை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். கூட்டு அணி ஏற்படாத ஒரு காரணத்தால், இந்த அரசுகளுக்கிடையே தகராறை விளைவிக்கவும் மக்களுக்கிடையே வெறுப்புணர்ச்சியைப் பரப்பவும்; அதனால் தங்களது தாயகங்களிலிருந்து லட்சக் கணக்கான மக்களை வெளியேற்றுவதற்கான நிலையை ஏகாதிபத்திய வாதிகள் ஏற்படுத்த ஏதுவாகின்றது. ஒரு உருக்குப் போன்ற கூட்டணியும், நட்புறவும் தான் இந்த நாடுகளிலுள்ள ஏகாதிபத்தியவாதிகள். ஆளும் பிற்போக்குப் பிண்டங்கள் ஆகியோரின் சதிச் செயல்களை முறியடிக்க முடியும்.

ஆகையால், கீழ்க்கண்டவற்றை உத்தரவாதம் செய்யவேண்டியது அவசியமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

50. சமாதானத்தை விரும்பும் சகல அரசுகளின் கூட்டுறவுடன் நேர்மையான முரணற்ற சமாதானக் கொள்கையைக் கடைப்பிடிப்பது; அவர்களோடு, ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்க ஐக்கிய அணியில் சேர்வது.

51. பரிபூரண சமத்துவ அடிப்படையில், எந்தவிதமான பாரபட்சமின்றி பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு உகந்த ஒரு பொருளாதார ஒத்துழைப்புக் கொள்கையை சகல நாடுகளுடனும் அனுஷ்டித்தல்.

52. பாகிஸ்தான், இலங்கை, நேபாளம் ஆகியவற்றோடு கூட்டணியும் நட்புறவும் கொள்ளும்படியான கொள்கையைக் கடைப்பிடித்தல்.

53. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் நியாயமான உரிமைகள், நலன்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காகத் தன்னால் ஆன அத்தனையையும் செய்யும் ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தல்.

* * * *

இந்த அம்சங்களடங்கிய திட்டத்தை இந்திய மக்கள்முன், அவர்கள் எதற்காகப் போராடி நிற்கிறார்கள் என்று கண்கூடாக உணர்ந்து கொள்வதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சமர்ப்பிக்கிறது.

பாடுபடுகின்ற கோடிக்கணக்கான மக்கள், தொழிலாள வர்க்கம், விவசாயிகள், பாடுபடும் படித்த கூட்டத்தார், மத்தியதர வர்க்கங்கள், தேசீய பூர்ஷ்வாக்கள் ஆகியவர்களை, நாட்டின் சுதந்திரத்திலும், சுபிட்ச வாழ்விலும் அக்கறை கொண்டுள்ளவர்களை ஒரே ஜனநாயக அணியில் ஒன்றுதிரண்டு நிற்கும்படி நமது கட்சி அறைகூவி அழைக்கிறது; நமது நாட்டின் பூரண விடுதலையைப் பெறவும், நிலப்பிரபுத்வ ஆதிக்கத்திலிருந்து விவசாயிகளை விடுதலை செய்யவும், சகல தொழிலாள மக்களின் வாழ்வையும் வளப்படுத்தவும், நமது விவசாயத்தில் பிரதானமான முன்னேற்ற சாதனைகளைப் பெறவும், நமது தேசீயத் தொழிலில் பிரமாத வளர்ச்சியை ஏற்படுத்தவும், நமது நாட்டின் கலாச்சார முன்னேற்றத்தைக் கொண்டுவரவும் ஒன்று திரளும்படி நமது கட்சி அறைகூவி அழைக்கிறது.

இந்திய மக்கள், அதன் தொழிலாளி வர்க்கமும் அதன் கம்யூனிஸ்ட் கட்சியும் தலைமை வகிக்க, மார்க்ஸ்—எங்கல்ஸ்—லெனின்—ஸ்டாலின் போதனைகள் வழிகாட்ட, நமது நாட்டு கோடிக் கணக்கான விவசாயிகளோடு எஃகுப் போன்ற கூட்டணி அமைத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்கள். மார்க்ஸிஸத் தத்துவமும் கோட்பாடுகளும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையும், மனித சமுதாயத்தில் கிட்டத்தட்ட பாதிப் பகுதியை சோஷலிஸத்திற்கு, உண்மையான ஜனநாயகத்திற்கு இட்டுச் சென்

திருக்கின்றன ; இதன் தீபஸ்தம்பமாகத்தான் சோவியத் யூனியன் சுடர் விட்டுப் பிரகாசித்து நிற்கிறது. ஆசிய மக்கள், மாபெரும் சீன மக்கள் ஜனநாயகத்தின் தலைமையின்கீழ் நின்று, ஏகாதிபத்தியத்திலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளும் போராட்டத்திலே இன்று ஈடுபட்டு நிற்கின்றார்கள். இன்னும் அடிமை வியாபாரிகள் சுரண்டவும், கொள்ளையடிக்கவும் இருக்கும்படியான அரைக்காலனி நாடாகவும், சார்பு நாடாகவும் ஆசியாவிலிருக்கும் கடைசிப் பெரும் நாடு இந்தியாதான். ஆனால், இந்தியாவும், உலகத்திலுள்ள பெரும் நாடுகளில் ஒன்றாக, வெற்றிப்பதாகை பூண்ட மக்கள் ஜனநாயகமாக மலர்ந்து சமாதானம், சுபீட்சம், இன்பம் என்ற திசை நோக்கி வெற்றிநடை போடும்படியான அந்தஸ்தை அடையும் நாள் நெருங்கிவிட்டது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது.

◆

ஜனசக்தி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை-14.